இணைப்பு—2.

[408-ம் பக்கத்தில் 695-ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

பர்மாவிலிருந்து இந்தியா திரும்பிய அகதிகளின் வாழ்வு செம்மையுறுவதற்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

(1) தாயகம் திரும்பிய அகதிகள் சிறு தொழில்களை அமைத்துக் கொள்வதற்காக 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய்வரை வாணிபக் கடன் உதவியளித்தல்.

(2) அகதி ஒருவர் மாநில அரசாங்கப் பதவியில் நியமிக்கப்படுவதற்கு பிறவகையில் தகுதிகள் பெற்றிருப்பின், வயது, கல்வித் தகுதி குறித்த விதிகளைத் தளர்த்தல்.

(3) அரசுத் துறைகளில் பணியில் சேர்க்கப்படுவதற்கு வேலை வாய்ப்பு நிலையத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவர்களுக்கு உயர் முதன்மை அளித்தல்.

(4) அகதிகளின் மக்களுக்குக் கல்விச் சலுகை அளிக்கும் திட்டம்.

(5) (a) கல்வி நிறுவனங்களில், பின்வரும் வகையில் இடம் ஒதுக்குதல் :—

(1) எம்.பி.பி.எஸ்.—இரண்டு இடங்கள்.

(2) பி.எஸ்.ஸி. (வேளாண்மை)—இரண்டு இடங்கள்.

(3) பொறியியல் கல்லூரி—ஓர் இடம்.

(4) கால்நடை மருத்துவம்—இரண்டு இடங்கள்.

(b) பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்குத் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 5 சத வீதத்திற்கு இடங்கள் ஒதுக்கப்படுதல். தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு சிறப்பான உதவித்தொகை அளித்தல்.

(6) அகதிகள் குழந்தைகளுக்காகத் தங்கும் வசதிகளுடன் இருபாலார்க்குமான பள்ளி ஒன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாத்தூரில் அமைத்தல்.

(7) அகதிகள் வேளாண்மையில் ஈடுபடுவதற்காக நிலம் அளித்து பிற உதவியையும் வழங்குதல்.

(8) நிலையாக குடியேறுவது பற்றிய விதியைத் தளர்த்தி மூப்புக்கான ஓய்வூதியம் அளித்தல்.

(9) அரசு அளித்துள்ள கடன் வசதியுடன் சிறுதொழில் செய்ய அகதிகளுக்கென்று பெட்டிக்கடைகள், விற்பனைக் கடைகள் ஆகியவற்றை உள்ளூர் அதிகாரிகள் அமைத்துக் கொடுத்தல்.

(10) அகதிகளில் ஆதரவற்ற மகளிருக்கென தனிப்பட்ட விடுதி ஒன்றைத் தொடங்குதல்.

(11) தொழில் அல்லது வாணிபம் எதற்கேனும் உரிமம், அனுமதி போன்றவை தேவைப்படும்போது அவற்றை வழங்குவதில் இவர்களுக்கு முதன்மை அளித்தல்.

(12) தஞ்சாவூர் மாவட்டத்தில் மகளிருக்கென தையல் பணி நிலையம் ஒன்றும் புதுப்பட்டினத்தில் சிறுர் பள்ளிகள் இரண்டும் அமைத்தல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(13) செங்கற்பட்டு மாவட்டம், மொண்டியம்மன் நகரில் மகளிருக்கென தையல் பணி நிலையம் ஒன்றைத் தொடங்குதல்.

(14) அதிக பாரம் ஏற்றப்படாத வண்டிகளில் வலவர் பயிற்சியை அளித்தல்.

(15) சென்னையிலுள்ள வாணிகப் பயிற்சி நிறுவனத்தில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றிற்கு குறுகிய கால படிப்பு அளித்தல்.

(16) வேளாண்மையல்லாத பிற பணிகளில் ஈடுபட்டுள்ள பர்மா அகதிகளின் குடும்பங்களுக்கு கிராமப் பகுதிகளில் ரூ. 2,250 உயர் வரம்புத் தொகை, நகரப் பகுதிகளில் ரூ. 4,600 உயர்வரம்புத் தொகை என்றும் வரம்புக்குட்பட்ட வீட்டு வசதிகள் செய்து கொடுத்தல்.

(17) சென்னையில் கூட்டுறவு அச்சகம் ஒன்றைத் துவக்குதல்.

Statement showing the schemes under implementation for the rehabilitation of repatriates from Burma.

1. Grant of business loans ranging from Rs. 2,000 to Rs. 5,000 to enable the repatriates to set up petty trades.

2. Relaxation of rules regarding age, educational qualifications, etc. for employment in State Government service where the repatriate is otherwise suitable for employment.

3. Grant of high priority in the matter of employment in Government department, when recruitment is made through Employment Exchange.

4. Grant of educational concessions to children of repatriates.

5. (*a*) *Reservation of seats in educational institutions as follows :—*

   1. M.B.B.S.—Two seats.
   2. B.Sc. (Agriculture)—Two seats.
   3. Engineering College—One seat.
   4. B.V.Sc. course—Two seats.

(*b*) Reservation of five per cent of seats in Industrial Training Institutes for Burma (and Ceylon) repatriates and grant of special stipends for boys admitted in the Industrial Training Institutes.

6. Special Residential School for repatriate children (boys and girls) at Mathur in Tiruchirappalli district.

7. Settling of repatriates in agriculture by grant of land along with other assistance.

8. Grant of old age pension by waiving the rule relating to domicile.

9. Construction of bunks/stalls by local authorities for being allotted to repatriates for setting up petty business with Government loan assistance.

(10) Special Home for unattached women among repatriates.

(11) Priority in the grant of licences, permits, etc., when these are required for any occupation or trade.

12. Establishment of a work centre in tailoring for women and two Balwadi Centres at Pudupattinam in Thanjavur district.

13. Starting of a work centre in tailoring for women at Mondiamman Nagar, Chingleput district.

14. Drivers' training course in light duty vehicles.

15. Condensed course in Typewriting and Shorthand at the Institute of Commercial Practice, Madras.

16. Provision of housing facilities in rural and urban areas to the families of Burma repatriates who are settled in non-agricultural occupation with ceiling of Rs. 2,250 for rural areas and Rs. 4,600 for urban areas.

17. Starting of a co-operative printing press at Madras.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS